# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

**பேச்சுப் போட்டி 2022**

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 2

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

*(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)*

அனைவருக்கும் வணக்கம் !



## அப்பா

சொல்லிடாத அன்பு தந்து அரவணைக்கும் அப்பா
பள்ளி செல்ல வைத்து எனக்கு அறிவு தந்த அப்பா
இல்லமது அமைதி பெற உழைக்கும் எனது அப்பா
உள்ளமது உவகை பெற உயர்வு தரும் அப்பா

கண் இரண்டில் ஒன்றாக இருப்பவரும் அப்பா
கண் முன்னே காட்சி தரும் தெய்வமும் என் அப்பா
எண்ணம் போல வாழ வைத்து வளர்ப்பவரும் அப்பா
கண்ணைப் போல என்றும் எம்மைக் காப்பவரும் அப்பா

பூமி தனில் கற்றவராய் உயர்த்துபவர் அப்பா
மாசில்லா மனிதராய் வாழ வழி காட்டுபவர் அப்பா
பெற்ற என் செல்வம் என முத்தமிடும் அப்பா
பெற்றது நம் பாக்கியமே அப்பா என்ற உறவு.

நன்றி,
வணக்கம்.


ஆக்கம் : ஆசிரியர் திருமதி. பாமரதி மகேஸ்வரமூர்த்தி.
ஆசிரியர் திருமதி. நிசாந்தி முரளிதரன்.